**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ரீதியாக உரிய ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவள்ளூர் தொகுதியில் திருவாலங்காடு ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார மையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாலங்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தில், ஏற்கெனவே 2, 3 முறை அந்தப் பகுதியிலே காய்ச்சல் வந்தபொழுது நாங்கள் ஆய்வு செய்தோம். அந்த ஆய்விலே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது கண்டறியப்பட்டது. ஆகையினாலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைக் கனிவோடு இந்த ஆண்டு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**27—**

## வாழை ஆராய்ச்சி நிலையம்

***7926—திரு. வி. பன்னீர்செல்வம்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*2017 ஜூன் 16*]

*(அ) கலசப்பாக்கம் தொகுதி, படவேடு கிராம ஊராட்சி, படவேடு கிராமத்தில் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, படவேடு கிராம ஊராட்சி, படவேடு கிராமத்தில் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

**திரு. வி. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல், தமிழக மக்கள் மனதில் என்றென்றும் நீங்கா இடம் பெற்று, இன்று வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே உறங்கிக் கொண்டிருக்கின்ற, நான் வணங்கும் மனித தெய்வம், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்கி, 'மக்களால் அரசு, மக்களுக்காகவே அரசு' என தமிழகத்தை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் தொடர்ந்து நல்லாட்சி நடத்தி வரும், கொங்கு நாட்டுச் சிங்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களையும் வணங்கி எனது கேள்வியைத் தொடங்குகின்றேன்.*

*திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட படவேடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2,000 ஹெக்டேர் பரப்பளவில் பூவன், கற்பூரவல்லி, ரஸ்தாளி, செவ்வாழை, மொந்தன், நேந்திரன், பேயன் போன்ற இரகங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் விளைகின்ற வாழை இரகங்களை விற்பனை செய்ய படவேடு கிராமத்தில் வாழை மொத்த விற்பனை நிலையம் ஒன்றையும், வாழையைப் பதப்படுத்த சுமார் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதனக் கிடங்கு ஒன்றையும் மற்றும் இயற்கை முறையில்*

வாழையைப் பழுக்க வைக்கும் கூடம் ஒன்றையும் அமைத்துத் தர அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவைக்கேற்ப அது நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் களக்காடு பகுதியில் ஏராளமான வாழைகளும் அதை நம்பி ஏராளமான விவசாயிகளும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். எதிர்காலத்தில் வாழைகளின் தன்மை, எந்த வாழையை நாம் பயிரிட்டால் அது பணப் பயிராக மாறும் என்பது பற்றி ஆலோனை கூறுவதற்கு ஓர் ஆராய்ச்சி நிலையம் தேவை. வாழையைப் பயிரிடும் விவசாயிகளுக்கு அருமையான யோசனையைக் கொடுப்பதற்கு நாம் ஏற்பாடு செய்தால் நாங்குநேரி தொகுதி வளம் பெறும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நாங்குநேரி தொகுதியில் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டுமென்பதை நான் ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.*

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் பெரியகுளம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பாக, புதிதாக வாழை ஆராய்ச்சி*

*2017 ஜூன் 16*]

*நிலையங்கள் துவங்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆராய்ச்சி நிலையங்களை பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**28**—

## வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***4539—திரு. எஸ். சுதர்சனம்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாதவரம் தொகுதி, மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் கட்ட ரூ.202 இலட்சம் ஒதுக்கீடு செய்து, பொதுப் பணித் துறைக்கு அனுமதியளிக்கப்பட்டு, கட்டடம் கட்ட டெண்டர் விடப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, ஒப்பந்ததாரர் ஒருவாரத்தில் அந்தக் கட்டடப் பணியைத் தொடங்கி, 31–3–2018 அதாவது, 9 மாத காலத்தில் இப்பணி நிறைவடையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

**திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பணியில் வைர விழா காணும் தலைவர் கலைஞர் அவர்களால், மாண்புமிகு எதிர்க்கட்சித்*